தஞ்சை சரசுவதி மகால் வெளியீட்டு எண் : 431

தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

பத்தொன்பதாம் தொகுப்பு

(மருத்துவப் பகுதி)

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

2001

விலை : ரூ. 55-00

தஞ்சை சரசுவதி மகால் வெளியீட்டு எண் : 431

தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

பத்தொன்பதாம் தொகுப்பு

(மருத்துவப் பகுதி)

சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்
புலவர் ச. திலகம்
தமிழ்ப்பண்டிதர்
சரசுவதி மகால் நூலகம் தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்

2001

விலை : ரூ. 55.00

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	தமிழ்ச் சுவடிகளின் விளக்கம் (பத்தொன்பதாவது தொகுப்பு)
பதிப்பாசிரியர்	:	புலவர். ச. திலகம்
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்
வெளியீட்டு எண்	:	431
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதல் பதிப்பு
வெளியீட்டு நாள்	:	அக்டோபர், 2001
தாள்	:	11.6 கி கி. தமிழ் நாடு
நூல் அளவு	:	34 × 48 செ.மீ.
பக்கங்கள்	:	124
படிகள்	:	250
எழுத்து	:	10 புள்ளி
அச்சிட்டோர்	:	ஸ்ரீ வேலன் பிரஸ் 132. S.P. கோயில் தெரு, சிதம்பரம்
புத்தகக்கட்டு	:	அட்டை கட்டு
பொருள்	:	மருத்துவச் சுவடி விளக்க அட்டவணை
விலை	:	ரூ 55/-

வெளியீட்டாளர் முகவுரை

பன்மொழிச் சுவடிகளின் பாங்குறு களஞ்சியமாகச் சரசுவதி மகால் நூலகம் விளங்குகின்றது. இந்நூலகத்தில் தமிழ், சமஸ்கிருதம், மராட்டி, தெலுங்கு ஆகிய மொழிகளைச் சார்ந்த பல்லாயிரக் கணக்கான ஓலைச் சுவடிகளும், காகிதச் சுவடிகளும் இடம் பெற்றுள்ளன.

இவ்வரிய சுவடிகளுள் சிறந்தவை தேர்ந்தெடுக்கப் பெற்று நூல்களாகப் பதிப்பித்து வெளியிடப் பெற்று வருவதோடு, இந்நூலகத்தின் அனைத்துச் சுவடிகளுக்கும் சுவடிவிளக்க அட்டவணைத் தொகுதிகளும் உருவாக்கப் பெற்று வருகின்றன.

இந்நூலகத்தில் அவ்வப்போது சுவடிகள் சேரச் சேர, அவற்றுக்கு விளக்க அட்டவணைத் தொகுதிகள் உருவாக்கும் பணியும் தொடர்கின்றது.

இந்நூலகத்தின் தமிழ்த் துறையில் இடம் பெற்றுள்ள ஓலைச் சுவடிகளுக்கு இதுகாறும் பதினெட்டு விளக்க அட்டவணைகள் உருவாக்கி வெளியிடப் பெற்றுள்ளன. இவற்றுள் ஆறு நூல் இலக்கியச் சுவடிகளுக்கான அட்டவணைத் தொகுதிகளாகவும் பனிரெண்டு நூல் மருத்துவச் சுவடிகளுக்கான அட்டவணைத் தொகுதிகளாகவும் அமைந்துள்ளன.

தற்பொழுது தமிழ்த்துறையில் இடம் பெற்றுள்ள மருத்துவ ஓலைச் சுவடிகளுக்கான விளக்க அட்டவணைத் தொகுதியாகத் "தமிழ்ச் சுவடிகளின் விளக்கம் 19 ஆம் தொகுதி" எனும் இந்நூல் வெளி வருகின்றது.

இந்நூலினை இந்நூலகத் தமிழ்ப் பண்டிதர் திருமதி. ச. திலகம் அவர்கள் உருவாக்கிப் பதிப்பித்துள்ளார்கள். அவர்களுக்கு என் பாராட்டுகள்.

இந்நூல் நன்முறையில் வெளிவர ஆவன செய்துள்ள, நூலக நிருவாக அலுவலர் திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும், வெளியீட்டு மேலாளர் திரு. அ. பஞ்சநாதன் அவர்களுக்கும், இந்நூல் வெளிவரத் துணை நின்ற ஏனையோர்க்கும் எனது வாழ்த்துக்கள். இந்நூலினை நன் முறையில் அச்சிட்டு அளித்த சிதம்பரம் ஸ்ரீ வேலன் அச்சகத்தார்க்கும் எனது பாராட்டுக்கள்.

சுவடியியல் துறையில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் இந்நூல் பெரிதும் பயன்படும் என நம்புகிறேன்.

தஞ்சாவூர்
30—10—2001

சி. கோசலராமன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்
சரசுவதி மகால் நூலகம்

முன்னுரை

உலகப் பிரசித்தி பெற்ற இந்நூலகத்தில் தமிழ்ப்பகுதியில் மட்டும் ஓலைச்சுவடிகள் - வரை உள்ளன அவற்றில் மருத்துவச் சுவடிகள் மட்டும் - உள்ளன, இன்னும் பல இடங்களிலிருந்தும் சுவடிகள் சேகரித்து வருகின்றனர்.

இதுகாறும் மருத்துவச் சுவடிகளின் குறிப்பு 3, 4, 5, 8, 9, 11, 12, 13, 14, 15, 17, 18, தொகுதிகளாக வெளிவந்துள்ளன, 1, 2, 6, 7, 10, 16, ஆகிய தொகுதிகள் இலக்கியங்கள். தற்போது இந்த 19-வது தொகுப்பில் சுவடி எண் 1351 முதல் 14:0 வரையிலான சுவடிகளின் விவர அட்டவணைக் குறிப்புகள் உள்ளன. இதன் உட் பிரிவுகள் ஒவ்வொன்றும் (a), (b), (c) எனக் குறிக்கப்பட்டுள்ளன.

தமிழ் மருத்துவப் பிரிவில் மருத்துவச் சுவடிகள் சேர்ந்து வருகின்றன. பெருந் தன்மையும் நற்சிந்தையும் கொண்ட பேரருளாளர்கள் சுவடிகளை எம்மிடம் தந்து தங்கள், தங்கள் பெயரை நிலை நாட்டிப் புகழடைவதுடன் மக்களையும் காப்பாற்றுவார்கள் என நம்புகிறேன்.

இத்தொகுதியில் விளக்க அறிமுகம் பெறுகின்ற சுவடிகளை இந்நூலகத்திற்கு நன்கொடையாக வழங்கிய நல்லுள்ளங்களுக்கு நூலகத்தின் நன்றி உரித்தாகின்றது.

சுவடியியல் அன்பர்கள், ஆய்வாளர்கள், அறிஞர்கள் ஆகிய அனைவர்க்கும் நூலகத்தின் இச்சுவடி விளக்க அட்டவணைத் தொகுதி பெருந்துணையாகத் திகழும் என நம்புகிறேன், இத் தொகுதியைப் பதிப்பிக்க அனுமதியளித்து, சிறப்பாக வெளிவர ஆவன செய்த நூலக நிருவாக அலுவலர் திருமிகு சாமி சிவஞானம் அவர்களுக்கும் வெளியீட்டு மேலாளர் திரு பஞ்சநாதன் அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

நன்முறையில் அச்சிட்டு அளித்துள்ள சிதம்பரம் ஸ்ரீ வேலன் அச்சகத்தாருக்கும் நன்றி.

தஞ்சாவூர்
12—10—2001

ச. திலகம்
தமிழ்ப்பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம்

எமது மருத்துவ வெளியீடுகள்

		ரூ. பை.
1.	அக்கால சித்த வைத்திய அனுபவமுறை	30-00
2.	அகத்தியர் அட்டவணை வாகடம்	52-00
3.	அக்கால சித்த வைத்திய பலமுறைகள்	15-00
4.	தன்வந்திரி ஏரண்ட தைலம்	20-00
5.	பஞ்சகாவிய நிகண்டு	130-00
6.	வைத்திய ரத்னாவளி	160-00
7.	எண்ணெய் வாகடம்	40-00
8.	ஜ்வரரோக சிகிச்சை	50-00
9.	பேதிமுறை சிகிச்சை	60-00
10.	போகர் நிகண்டு	18-00
11	க்ஷய உளமாந்தை சிகிச்சை	18-00
12	காஸ சுவாஸ சிகிச்சை	25-00
13.	கர்ப்பிணி பால ரோக சிகிச்சை	45-00
14.	நயனரோக சிகிச்சை	70-00
15.	பலதிரட்டு வைத்தியம்	50-00
16.	பாண்டுகாமாலை சிகிச்சை	40-00
17.	மச்சமுனி 800	21-00
18.	ராமதேவர் சூத்திரம்	70-00
19.	அகத்தியர் 100	30-00
20.	தேரர் நீர்குறி சோதனை	10 00
21.	ஆனந்தகந்தம்	100-00
22	வைத்தியத் திரட்டு	40-00
23.	வாதரோக சிகிச்சை	60-00
24.	சௌமிய சாகரம்	70-00
25.	சூலை, குட்டரோக சிகிச்சை	80-00
26.	நாடி வாகடம்	150-00

பொருளடக்கம்

கோ

ச

சு

த

தி

தெ

மா

மு

வ

தஞ்சை சரசுவதி மகால் நூலகம்

தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

பத்தொன்பதாம் தொகுப்பு

மருத்துவப் பகுதி

* * *

வரிசை எண் : 2578 சுவடி எண் : 1351

சித்திராரூடம்

ஏடுகள் : 120 கி. எண்ணிக்கை : 3000 அளவு : 25×2.5 செ.மீ. பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அறியஇயலவில்லை பொருள் : விஷ வைத்தியம் நிலைமை : நல்லநிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

அத்திமா முகவன் செய்த அடியினைக் கமலம் போற்றி
சித்திராரூடந் தன்னைச் செப்பமாய்ப் பொருளார்
சுற்றமாய் யெவர்க்குந் தோன்ற சுறக்கும்
நொண்டிச் சிந்தாய் வித்தர்க் கருளிநாலே
தமியேனும் விளம்ப லுற்றேன்.

முடிவு :

ரெத்தக் கோவாரியின் குணம்

ரெத்தம் போலே நீர்விடும். யிதுக்கு யெள்ளும்
பாசிப்பயறும் தென்னம் பாளையும் அரைத்து
மோரில் கலக்கி வார்க்கத் தீரும.

காலம் :

இல்லை

குறிப்பு :

இந்நூலின் இறுதியில் மாட்டு வாகடமும், சில அனுபவ வைத்திய முறைகளும் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 2579 சுவடி எண் : 1352

புலத்தியர் — 1500

ஏடுகள் : 141 கி. எண்ணிக்கை : 5000 அளவு : 35 × 4 செ மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : புலத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்லநிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பாகுடன் கிணேசன் பாதம் பணிந்து
முக்குணமுங் கேளாயி
வாகடத் தொகுதியெல்லாம்
வகுத்தொரு சூக்ஷத்திரமாக்கி
யாகமக்ஷத்தி னூலாலே யடந்திடும்
நோய்களெல்லாம் — 1

முடிவு:

ஆமப்பா வாகடத்தில் சூக்ஷத்திரங்களெல்லாம்
மறைத்திட்டேயு னு வொன்று மடக்கமில்லை
வேமப்பா நோவெல்லாம் படுதீபத்தும்
வேறுள்ள நூல்களெல்லாம் விபரமில்லை
ரோமப்பா யிந்தநூல் துகையேதென்றால்
சொல்லுகு றேனுயிர்தந்நூறு சொல்வேதம்
தாமப்பா உள்ளபடி சொல்லி வைத்தோம் — 1388
நாதாக்கள் கிடாஷத்தாலே சூத்திரத்தின்
முத்தே

காலம் :

இல்லை

குறிப்பு

இதில் பலவகை மருந்துகள் முதலியன சொல்லப்பட்டுள்ளன.

வரிசை எண் : 2580 சுவடி எண் : 1353

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 29 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 21.5 × 3.5 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

வெடியுப்புச் சுண்ணம்

ஊசிப்பாலையிலையுங் கொழுந்து கொடியுங்
கொண்ணாந்து வெடியுப் புனாலாங் காச்சு
உப்பு பலம் 4-ம் போட்டு அம்மியில்
வைச்சு நேக அரைச்சு கொஞ்சமாக காய
வச்சு அதுக்குள்ளே காரியம் ஒரு கட்டியாய்

முடிவு :

யிதிலே சமுச்சயமிருந்தால் ஒரு நெல்லெடை போட்டு
செய்யவும். காட்டுத் தொவரைப் பழத்தில் கருந்தோவாம்
பளம் அளப்பிச்சிக் கொடுத்தால் அனேகம்
அலுவலாயிருக்கிறது.

காலம்

இல்லை

குறிப்பு :

இதில் கருவங்கக்கட்டு, தாமிரசுத்தி, வச்சிரகுகை, சூதக்கட்டு முதலியன கூறப் பட்டுள்ளன.

வரிசை எண் : 2581 சுவடி எண் : 1354.

வைத்திய அகராதி

ஏடுகள் : 67 கி. எண்ணிக்கை : 2000 அளவு : 22 × 3 செ மீ
பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அறிய இயலவில்லை. பொருள் : மருத்துவ அகராதி நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

அடைபயன் — கடுக்காய்
அரிதகி — கடுக்காய்
அமுர்தம் — கடுக்காய்
அரிக்கி — கடுக்காய்
அக்காந்தான் — தாணிக்காய்
அம்பலத்தி — தாணிக்காய்

முடிவு :

வாசம் — ஆடாதோடை
மஞ்சரி — செந்நாயுருவி
அரிமஞ்சரி — குப்பைமேனி
தாயகம் — ஆடாதோடை
வராகி — நிலப்பனை
வட்டத் திருப்பி — பொன் முசுக்கை.

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், மூலிகைகள் முதலானவற்றின் வேறு பெயர்கள் அகர முதலியாகத் தரப் பட்டுள்ளன.

வரிசை எண் : 2582

சுவடி எண் : 1355.

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 93 கி. எண்ணிக்கை : 2000 அளவு : 40 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

மேக நிதானம்

தக்க தாரணி மானிடத் தோர்கள் கேள்
பக்கமா செலம்பத்திரு வகையுமெ—னக்க
நாயகன் நாயகிக்கே சொல்ல
மிக்கனதகு விளம்பி விதித்தே.

முடிவு :

கட்டிகை போம் கரிசாலைப் பாண்டுக்காகும்
கனத்த பொற்தலைக்குத்தன் காய சித்தியாகும்
....ருக்கு சன்னி போகும்.
யேத்தமாம் வெள்ளெருக்கு சாரங்கட்டும்
மடிகை மணத்தக்காளி தணலாத தியாகு
—மத்த கருந்தக்காளி கெந்தி கட்டு,......

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில், பீனிசத்துக்கு, மேகத்துக்கு மருந்துகள் கூறப்பெற்றுள்ளன.

❋ ❋ ❋

வரிசை எண் : 2583 சுவடி எண் : 1356

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 59 கி. எண்ணிக்கை : 2000 அளவு 35 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் : மருத்துவம்
நிலைமை : சிதிலம் முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

மை வாங்கும் வகை, மைபார்க்கும் பருவம்

சுற்றியதோர் திரியதனை விளக்கிலிட்டு
சுகமான முன் தயிலம் அதனில் வார்த்து
பத்தியாம் மகாரம் பொட்டுக் குள்ளே

பத்தியாம் மையதனை வறண்டி கொண்டு
வெற்றியாம் முன்தயிலப் புத்து தேனும்.........

முடிவு :

அமுர்தசஞ்சீவி லேகியம்

நன்றாகக்கிண்டி கிண்டி வளமாக ரெண்டுபடி
னரு நெய்யும் வாறுமுரிகியே தேன்படிதான்
னொன்று விட்டு முறை தவறாத வண்ணம் பதத்தி
தில் வாங்கு யிருகியே போகாமல் ....
கலசகம் பாம்பமாலேகியந்தான் மிதமா காணே.

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில் சூலை, குன்மம், முதலியவற்றுக்கும், சில்லரை வைத்தியங்களும் சொல்லப் பட்டுள்ளன.

★ ★ ★

வரிசை எண் : 2584 சுவடி எண் : 1357-a

தெட்சிணாமூர்த்தி கலைச்கியானம் 1200 க்குச் சூத்திரம் – 120

ஏடுகள் : 31 கி. எண்ணிக்கை : 2000 அளவு : 24 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : தட்சிணாமூர்த்தி பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்லநிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஆதி சத்தி சிவமான சோதி காப்பு
அகண்டமெனும் பூரணத்தி னறிவேகாப்பு
சோதியென்ற வாலை மனோன்மணியே காப்பு
சொல்லடங்கா விண்ணொளியின் சுடரே காப்பு
நீதியுள்ள சற்குருவின் பாதங் காப்பு
நீயென்றும் நானென்றும் நின்றேன் காப்பு. — 1

முடிவு :

திறந்ததொரு தமர்வாசல்க்குள்ளே நீயும் செலுத்தடா
வாசிதனை ரவியால்மைந்தா பறந்ததொரு
வாசியது பதிவுமாகும்.
பதிவான தீபஒளிகண்ணில்க் காணும்
மகற்ந்ததொரு பால்போலே அமுற்தமுறுங்
கனிவான அமுற்தமதைத் தினமுங் கொள்ளு
சிறந்ததொரு பூரணத்தின்முங் கொன்று
சிவமான மவுனற்றில்ச் சேறமுற்றே — 120

தெஷ்ணாமூர்த்தி துணை. கலைக்கியான
ஆயிரத்திருநூறுக்குச் சூத்திரம் ஞாத்திருவது

முற்றும்

காலம் :

இல்லை

* * *

வரிசை எண் : 2585 சுவடி எண் ; 1357-b

விஷசங்காருடம்

எடுகள் : 62 கி. எண்ணிக்கை : 2000 அளவு : 24× 3செ.மீ
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறிய இயலவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் ;

திருமணி மந்திரப் பூச்சி
திருபுகை தூள் குடோரி தீரும்
மருந்தவிழ்தம் கலிக்கம்
திருவிழ சங்காரத்தைத் திருவருள்
மனதிலுதித்து திருவருளாலே கூற
திருவருள் குருவேயுந்தன் திருவடிசிமந் தேனய்யா — 1

முடிவு ;

போகரணம யக்கறவும் தீண்டித்தானால்
பொரிவச்சு தட்டினது போல் சுழண்டு
நாச்சத்து மெய்மறந்து நடு நடுங்கி
நட்டவிழி மேல்ச் சொருகி கீள்விழுந்து
தாக்கப்பா நீல கண்ட குளிகை........ ...
.... கரிப்பாலை வேரை திண்ணு...........

குருசாமி துணையாக வேணும்.

காலம் :

யிந்த விஷசங்காருடம் யிதில் யெழுதியிருக்குறது 190 பாட்டு ..... னூல் வைத்து யிருக்குற பேரிடத்தில் விசாரித்து யெழுத வேண்டியிருக்குது.

※ ※ ※

வரிசை எண் : 2586 சுவடி எண் : 1357-C

உடலறி விளக்கம்

எடுகள் : 31 கி எண்ணிக்கை : 1500 அளவு : 24 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : சங்கராச்சாரியார் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

விடமருந்தி அமுர்தண்ட விமலநாதன்
விறிசடையன் மதிசூடி மழுமாநேந்தி
இடமருவு பரைபூதலவனறு முகலவனிள
றிரு மருகனிறாறு தோளன்
குடலுயறன் றனக்கிளைய குமரன் கந்தன்
குகனை மறவாமல் நெஞ்சகமே பூண்டு — 1

முடிவு :

மகத்தான நடுவரையில் மகாரம் போடு
ஆனா நீ முதற்கோணம் நகாரம் போடு
அடுத்திடையில் யகாரமிடு முதற்கோணத் தேகி
ரேதாணு காலையிடு மறுகோணத்தில்ச் சாரவே
சிகார மஞ்சு மாச............ — 47

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, சங்கராச்சாரிய சுவாமிகள் அருளிச் செய்தது. உடற்கூற்றினை அறியும் தன்மையினைக் கூறுவது. முழுமையு மின்மையுமால் செய்யுள் எண்ணிக்கை அறிய முடிய வில்லை. இதில் உள்ளது 47 செய்யுட்களே.

★ ★ ★

வரிசை எண் : 2587 சுவடி எண் : 1357-d

தட்சிணாமூர்த்தி கலைக்கியானம் சூத்திரம் — 200

ஏடுகள் : 56 கி. எண்ணிக்கை : 2000 அளவு : 24×3 செ மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : தட்சிணாமூர்த்தி பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

எட்டெட்டா மாதியிலே கலைக்கியான சூக்ஷ்ச்சமென்
றெழுமீறா நான்கில் நாலுமொன்றாய்
விட்டகுறை யுலகமதி லறியாமல் கமல
வெளிகோணக் குருநூலில் மூலஞ் சொல்லி, — 1

முடிவு :

தானென்ற கட்சியடா முதலாமாதி
தனசைபிற் பொருளடக்கமாகச் சொல் னேன்
மானென்ற வாலையுனக் களித்தபூதி
மாணாகமெட்டு வகை விடங்கள் மீள
தானென்ற திருநீறே பிணியைத் தீர்க்குந்
தாயாதி பூதியடா வியாதிபோச்சு
தானென்ற நிறுணக்கு வுண்மை யுண்மை
சறுவாதி கலைக்கியான சூத்திர முற்றே — 29

கலைக்கியான சூத்திரம் எழுதி முகிந்தது. முற்றும்

சிவமயம்

காலம் :

இல்லை

குறிப்பு :

இந்நூல் 9-ஆம் தொகுப்பிலுள்ள சுவடி எண் 367 (b). வரிசை எண் 734-ம் சுவடியைப் போன்றது.

வரிசை எண் : 2588 சுவடி எண் : 1357-e

வைசூரி நிதானம்

ஏடுகள் : 10 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 24×3 செ மீ
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறிய இயலவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பூறணமா நிரைந்து நின்ற சோதிபாதம் போற்றி செய்து
உமைபதத்தை புகழ்ந்தங்கே
காரணமாய் நிறவாணி பாதம் போத்தி
கருணைபெற ஆகஸ்திய முனிகமலம் போத்தி.
....
.... — 1

காலம் :

இல்லை

குறிப்பு :

ஏடுகள் பயனற்ற நிலையில் உள்ளன.

* * *

வரிசை எண் : 2589 சுவடி எண் : 1358-a

கருவூரார் சூத்திரம்

ஏடுகள் : 23 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 24×3 செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : கருவூரார் பொருள் : வேதாந்தம்
நிலைமை : சிதிலம் முழுமை : முற்றுமுள்ளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சீர்பெருகும் வேதாந்த சூத்தி ரத்தை
தெட்சிணா மூர்த்திபாதந் தெளிந்து போற்றி
கார்பெரு மாயியுட பாதம் போற்றி
கயிலாச திருமூலர் பாதம் போற்றி
....
.... — 1

முடிவு :

வரிசையென்ற பிரமமென்னும் பாசமிட்டு
மவுனமா யோகமென்ற பதியுமிட்டு
உரிசையென்ற நேசமாம் விகற்பமிட்டு
ஊடாடும் நிராசகாரத் துணர்வும் விட்டுக்
....
.... — 114
கருவூரார் சூத்திர விதி முற்றும். குருபாதமே கெதி

காலம் :

இல்லை

* ☆ *

வரிசை எண் : 2590 சுவடி எண் : 1358-c

சுந்தராநந்தர் சூத்திரம்

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை : 100 அளவு : 24 × 3 செ மீ.
பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : சுந்தராநந்தர் பொருள் : மருத்துவம்
நிலைமை : சிதிலம் முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பூமிநாத மேகமே புனல் சொரிந்த
பூவதாமாமடார விமுகத்திலாயிருந்த யிந்தடா
சோமநாத மீறியே சொரூபம் வைத்த
சத்தியாம் எம வித்தை பூரணமிருக்க அட்டசித்தியே. — 1

முடிவு :

வேதை காட்ட கைமுறைகள் வேணு
மல்லாதோ லென்னூல் டாயறிந்து பாரு
முண்மையாய் ஓதிமம் போல நந்திவந்து பதேசமே செப்புவரார்,
தியானபூரண மறிந்து பாரு சோதியே, — 25
சுந்தரானந்தர் சூத்திரம் முற்றும். குருபாதம்.

காலம் :

இல்லை

குறிப்பு :

இது சுந்தரானந்தர் தண்டகம் என்ற பெயரால் உள்ள சுவடி எண் 235c போன்றது. 33 செய்யுட்கள் உள்ளன.

வரிசை எண் : 2591 சுவடி எண் : 1358-c

நந்தீசர் சூத்திரம்

ஏடுகள் : 6 கி. எண்ணிக்கை : 200 அளவு : 24×3.5 செ மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : நந்தீசர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

நாலு நூறாயிரங்காப் புளி மந்திரம்
நாலாயிரத் திருநூற்றில் பக்கம்
பாலான வாதமறுபதும் பத்தியம்
காலடி மின்னாள் கவத்துவம் போதே

முடிவு

உரைதனைச் சொல்லி யுணர்வாய் விடுத்துக்
கரையினிற் சாகா வரமுங் கொடுத்து
கரையேத்தி விட்டுக் கைம்முறை காட்டித்
திருமூலனைப் போல சோதிட மதியே — 60

நந்தி கேசுரபரர் சூத்திரம் முற்றும்

குருபாதமே கெதியுண்டாக வேண்டியது

காலம் :

இல்லை

வரிசை எண் : 2592 சுவடி எண் : 1358-d

பிரமமுனி சூத்திரம்

ஏடுகள் : 5 கி. எண்ணிக்கை : 500 அளவு : 24 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : பிரமுனிநாயனார் பொருள் : மருத்துவம்
நிலைமை : சிதிலம் முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

தொட்டது கண்ணாட்டஞ் சுளிமுனையைப் பார்த்து
நிற்க மிரண்டொங்காரத் தியல்பறிய
பட்டதொரு சித்தியுடன் தீட்சை செயினால்
சிந்தையுறு மண்டமேற் சுத்தவெறும்பாளே துணை.

முடிவு:

பாராப் பிறமாகும் பாசிந்த விந்தாலே
சாராப் பிரமமுனி தானென்ற
வாராக் குரு நந்தியா சான்றான் கூப்பிட்டுக்கியான
முரையருள் வாதசித்தனம்பது — 51

பிரமமுனி சூத்திரம் முற்றும். குருவே துணை.

குருபாதம்

காலம் :

இல்லை

வரிசை எண் : 2593

சுவடி எண் : 1358-e

அழுகணி சித்தர் சூத்திரம்

ஏடுகள் : 5 கி. எண்ணிக்கை : 500 அளவு : 24×3 செ.மீ.
பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : அழுகணிசித்தர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

மேகத்தாளந்தாச்சு ஆத்தாளே விசைரவியில்
சுண்ணாம்பாமா கச்சிறு நீரிலட்ட
சித்தியாவள் சத்தி — 1

முடிவு :

உள்ளமறக்குச் சென்னேனானாத்தாளே
உசாவெளி கண்டதெல்லாம்
புத்தியுள்ள பத்தர்கலிக்கு மாத்தாளே
பலிக்குமப்பா கண்டாயே. — 6

அழுகண்ணிச் சித்தர் சூத்திரம் முற்றும்.

அகண்ட பரிபூரண சழச்சின்மையானந்த பாத

பங்கயமே நித்தியம் — குருபாதம்.

காலம் :

இல்லை

❀ ❀ ❀

வரிசை எண் : 2594

சுவடி எண் : 1358-f

கோரக்கர் சூத்திரம்

ஏடுகள் : 10 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 24×3 செ.மீ.
பக்கத்திற்கு : 0 வரிகள் ஆசிரியர் : கோரக்கர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்லநிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

அருள்பெத்த நந்தி யாசானெனக்கு
பொருள்பெற்ற மூலர் போகரெனக்குத்

தருவொற்ற தோளாசட்டை முனியும்
பரமுள்ள கொங்கணர் பட்ச மிகுதியே — 1

முடிவு :

குருவண்டு கோசயீசங் குறித்ததோர்
வீரன் கூடன் குருவடி நிலவுப் பாகுங்
கொள்கை கல்லுப்புக் கூட்டி
குரு நிறைகல்லுப் போடுங் கொண்டவன்
குருவாஞ்சீசன் குருபாதந் தொழுது வாதங்
கூறியவருள் கண்டாரே — 9

காலம் :

இல்லை

வரிசை எண் : 2595 சுவடி எண் : 1358-g

வாசமுனி சூத்திரம்

ஏடுகள் : 8 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 24×3 செ.மீ
பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : வாசமுனி பொருள் : மருத்துவம்
நிலைமை : சிதிலம் முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

யேமப் பிறப்புக்கினிய வளலையெனுங்
காமப்பிறப்பில் கரைபோலாம்
வாமத்திலாயிபதம் பூசையருளும்
பராபரத்தில் தேயுங்கிணேசன்டிதோ — 1

முடிவு :

ஒப்பாருமில்லை யொளியாங் குருநந்தி
செப்பிய வாதந் திறந்தாரனெவே தான்
அப்பனே வாதமுதச் சித்தியருளு மென்று
முப்பூவமலைச் சவுக்கார முத்தாமே. — 71

வாசமுனி சூத்திரம் முற்றும்.
குருபாதமே கெதியுண்டாக வேண்டியது.

காலம் :

இல்லை

* * * *

வரிசை எண் : 2596 சுவடி எண் : 1358-h

போகர் சூத்திரம்

ஏடுகள் : 10 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 24×3 செ.மீ.
பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : போகர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

வித்தை கைமுறையைச் சொன்னேன்
செய்யப்பா முப்பூவுஞ் சென்று பயிரேறு
வைப்பாரை வீரம்பூரமுடன் கூட்டிவைப்பா
செயநீர் மாதத்திலே காணுமே — 1

முடிவு :

உரைத்தேன் கருக்கள் குருக்கள் ஒளியாமல்
நிரை தேன் சிவனுமையாள் நீதமுரையாணை
வைத்தேன் பரைக்கே நீபூசை பண்பாகச் செய்து கொண்டால்
குடுக்காணுமப்பா குறையென்னும் பூரணமே. — 68
போகர் சூத்திரம் முற்றும், குருவேதுணை.

காசிகம் :

இல்லை

இந்நூல் சுவடி எண் 481e/D. 867 போன்றது.

வரிசை எண் : 2597 சுவடி எண் : 1358-i

இடைக்காட்டார் சூத்திரம்

ஏடுகள் : 9 கி. எண்ணிக்கை : 500 அளவு : 24×3 செ.மீ.
பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : இடைக்காட்டார் பொருள் : மருத்துவம்
நிலைமை : சிதிலம் முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

வாருலாவு மேகமே நற்கங்கை சத்தியோர்
சிவம்பாரில் வாள்வீட்டுப்பு சுத்தி
பண்புவாக நீர்
சீருலாவு கெங்கையால் தெளிந்த யுப்பிலே
நீர்கலந்த போதுதளல்
நீடுலாவு சுண்ணமே.

முடிவு :

சித்தனாய் கெவன சித்தி தேகங்கள் வச்சிரகாய
முற்றியாயறிந்து வாதமுன்னிற்கச்
சிதம்பரத்தைப் புத்தியாய்ப் பூசை செய்தால்
புகட்டுவார் மதுவுண்டாப் போலுற்ற
மருனக்குப் புத்தியுவா டியுயர்ந்து சாறே. — 67
யிடைக்காட்டார் சூத்திரம் முற்றும்

குருபாதம் துணை

காலம் :

இல்லை

* * *

வரிசை எண் : 2558 சுவடி எண் : 1359

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 55 கி. எண்ணிக்கை : 1500 அளவு : 27 × 3 செ.மீ
பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்லநிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

நீராம்பல் மகோதரம் வீக்கங்களுக்கு
காச்சல் வெடியுப்பு, கோமயத்தில் காச்சு
துவைச்ச கிட்டாள் பலம் — 1 மேல்படி
கோமயத்தில் ஏழுநாளூற விட்டெடுத்துக் காய
வைத்து அரப்பொடி பலம் — 1

முடிவு :

இதை வைத்துக் கொண்டு வெள்ளை பாஷாணக்
கட்டி விராகன் 5, ஒரு எலும்பிச்சம்
பழம் ரெண்டாய் அரிந்து நடுவில் வைத்து
பொறுக்கி முள்ளினால் சுத்தி

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில் பல அனுபவ வைத்திய முறைகள் எழுதப்பட்டுள்ளன.

★ ★ ★

வரிசை எண் : 2599 சுவடி எண் : 1360

அகத்தியர் கரும காண்டம்

ஏடுகள் : 28 கி. எண்ணிக்கை : 500 அளவு : 24 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : மிகச் சிதிலம் முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பூரணமாமூலமுதலாறாதாரம் புரிபாடாதிசை
வாயுநாடி மூன்று
காரணமா இடை பின்னாய் சுளினையாகி
கலந்து நின்ற வாதம் சிலேற்பமாகி
....
.... — 1

முடிவு :

வெள்ளி லோத்திரம், நன்றாக சுக்கோமம்
வகைக்குகால் களஞ்சி குணமாக அரைத்தாட்டு
குறுக்காக்கே. — 153

காலம் :

இல்லை

வரிசை எண் : 2600 சுவடி எண் : 1361

அகத்தியர் வேத காவியம் — 1000

ஏடுகள் : 49 கி. எண்ணிக்கை : 5000 அளவு : 35×4 செ.மீ.
பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : சிதிலம் முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

காப்பு

ஓமென்ற மூல கணபதியே காப்பு
உண்மையுடன்... மேனையுகந்து நின்ற
ஆமென்ற வமுத கலையுட் கொண்டே தான்
டங்கியந்த மனோன்மணியின ருமையாலே
....
.... — 1

முடிவு :

காணாத காட்சியெல்லாங் காணலாகுங்
கருணைவளர் காவியத்தை கண்ட போதே
தோணாத தொன்றுமில்லை யெல்லாந்
தோற்றுஞ் சுத்தமுள்ள கிரந்தமடா
....
.... — 993

காலம் :

இல்லை

வரிசை எண் : 2601 சுவடி எண் : 1362

சுந்தரானந்தர் பாடல் சூத்திரம்

ஏடுகள் : 17 கி.எண்ணிக்கை : 1000 அளவு : 35×3.5 செ.மீ
பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : சுந்தரானந்தர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்லநிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஆதியந்த மிகநிறைந்த சட்டை முனி
கன்பான சேயென்றே பிள்ளையாகிச்
சோதியந்தத் துள்ளிருக்குஞ்
சுடரைப் போல
சுந்தர மென்றே பேருமிட்டார் எங்கள் தாதர் — 1

முடிவு :

தானென்ற மூலமதை யறிய வேணும்
சத்திசிவன் ரெண்டையுங் காண வேணும்
தானென்ற கும்பிடுங் கல்லெறிய வேணும்
தருவான அகண்ட வித்தை செய்ய வேணும்
....
.... — 101

காலம் :

பிறம்மாதிட்ஷா ஹூ வைய்யாசி மீ 23உ சோமவாரனாள் பதினைஞ்சு நாழிகையிலே சுந்தாரனந்தர் சூத்திரம் வெங்கிடாசலம் எழுதி முடிந்தது

முற்றும் சற்குருபாதம் கெதி. சிவமயம் – எனச் சுவடி எழுதிய காலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பு :

இந்நூல் எமது சுவடி எண் 29-a, 29-b போன்றது.

★ ★ ★

வரிசை எண் : 2602 சுவடி எண் : 1363

போக நாயனார் சோடச சூத்திரம்- 50

ஏடுகள் : 15 கி. எண்ணிக்கை : 500 அளவு : 35 × 3.5 செ.மீ.
பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : போகநாயனார் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

முப்பாழுக் கப்பால் முதலான நிற்குணப்பாழ்
அப்பாழ் வழலை அறிவீரால் - யெப்போதுந்
தானவனாய் நிற்குஞ் சகலகுரு வானதொன்றா
மனாமைுகன் காப்பா மறி — 1

முடிவு :

வானுறு சூட னொன்று
    வாருதி உப்பதொன்று
கானூறு கல்லில் னாதங்
    கலரிது அமுற்த பேதி
ஊனூறு மாமுரி மந்திர
    மடுரியின் பூவா முத்தே. — 51

காலம் :

போகநாயனார் சூத்திரம். வெங்கிடாசலம் யெளுதி முகிந்தது. முற்றும்.

குறிப்பு :

இந்நூல் 11-ம் தொகுப்பிலுள்ள M. No. 504-ஐப் போன்றது. இந்நூலின் இறுதியில் அகத்தியர் வகாரம் அஷ்ட்டமி; அகத்தியர் அஷ்ட்டமி ஞானம் போன்ற நூல்கள் எழுதப்பட்டுள்ளன.

வரிசை எண் : 2603 சுவடி எண் : 1364

சுந்தரானந்தர் சூத்திரச் சிலவானம்

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை : 500 அளவு : 35×3 செ.மீ.
பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : சுந்தரானந்தர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பூமிநாதமேகமே புனல் சொரிந்த பூவதாம்
ஆமடா ரவிமுகத் திலாயிருந்த யிந்தடா சோமநாத மீறியே
சூரும்பாவைத்த சத்தியா மயே வித்தை
பூறணமிருக்க அஷ்ட்ட சித்தியே. — 1

முடிவு :

சோதியான லிங்கதார சூதனுதா நல்லிமும்
ஆதியாம் பழத்தினா லரைத்து நாலு சாமமும்
பேதி யண்டஞ்சனில் ... ... பிளக்குமாங் குமரியில்
வாதி வான வன்னியில் மரு வளட் குத்துமே — 26

காலம் :

பிறமாதி ஹூ ஆனி மீ 3-உ புதுக்கோட்டையிலிருக்கும் ஆறுமுக ஆசாரியார்க்கு நெடி ஊரிலிருக்கும் வெங்கிடாசலம் சுந்தரானந்தர் சூத்திரச் சிலவானம் யெளுதி குடுத்தது.

வரிசை எண் : 2604 சுவடி எண் : 136³

அகத்தியர் — 50

ஏடுகள் : 6 கி. எண்ணிக்கை : 100 அளவு : 35×3 செ.மீ
பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

நாடியதோரகண்ட பரிபூரணமாய் நின்ற
நாதமுதல் கிணேசனோடு கந்தன் காப்பு
ஆடியதோர் சிவனுறும் மென்னைப் பெத்த
ஆத்தாளும் நாவு தன்னில் குடிகொண்டேதான் — 1

முடிவு

தானான சவுக்கார மிது தானப்பா
சாதகமாய்க் கழுவென்று னூலுதொறும் மொளித்தார் சித்தர்
வீனான பாகஞ் சொன்னா யானால்
விண்ணிடித்தான் வந்துவிளுமந் தலை தெரிக்கும்பாரு
....
.... — 49

காலம் :

இல்லை

குறிப்பு :

இந்நூலில் ஐம்பதாவது பாடல் எழுதிய ஏடு காணப்படவில்லை.

★ ★ ★

வரிசை எண் : 2605 சுவடி எண் : 1366

இராமதேவர் சிவயோகம் — 200

ஏடுகள் : 24 கி. எண்ணிக்கை : 1500 அளவு : 32.5× ".5 செ.மீ.
பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : இராமதேவர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

மூலமெனு முதற்பொருளாய் முத்தி நடுவணையில்
மூதண்ட மானதொரு பிர்மமத்துக் கப்பால்
ஞாலமெனுந் தலமுடைய சத்திபதி மேலே
நாதாந்தப் பெருவெளியின் கீழே — 1

முடிவு :

தொழுதமுறை யென்னா வென்றால் அகார தீக்ஷை
சுருக்கமுள்ள உகாரமெடா சத்தி சத்தி
பளு தொன்று நினையாமலிரண்டு மொன்றாய்ப்
பக்குவமாய்த்தான் செபித்து நெளிதமுள்ள
....
.... — 170

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில் சிவபூசை, சக்திபூசை, குருநிலையறியவும், பூரண விலாசம், கட்டுக்கொடிமை முதலியன உள்ளன.

வரிசை எண் : 2606 சுவடி எண்: 1367

கொங்கணர் ஞானம் — 100

ஏடுகள் : 45 கி. எண்ணிக்கை : 1500 அளவு : 21×2 செ.மீ.
பக்கத்திற்கு ; 6 வரிகள் ஆசிரியர் : கொங்கணர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை (ஓரங்கள் சிதிலம்) முழுமை : முற்றுமுளது
எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

அகண்ட பராபரமான மூலநாயனடி தொழுது
காலாங்கியர் பதம் போத்தி
புகண்டு நிஃ ற போகருடைய பதத்தைப் போற்றிப்
புகழ்பெரிய வல்லோர்கள் பதத்தைப் போற்றி — 1

முடிவு :

தாக்கயிலே……… கனத்து விம்முஞ்
சாதகத்துக் கேது ……… தாக்கு
னோக்கயிலே பளிச்சென்று னாதங் காணும்
னுளைஞ்செறனாதம் போம் மறிவுசேரும்
…………… …………… ………… ………
………… ………… ………… ……… — 117

காலம் :

இல்லை

வரிசை எண் : 2607 சுவடி எண் : 1368

வைத்திய முறைகள்

ஏடுகள் : 63 கி.எண்ணிக்கை : 1000 அளவு : 25×3 செ.மீ
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் : மருத்துவம்
நிலைமை : சிதிலம் முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

கடுக்காய்க் கற்பம்

வயசங்கே அன்பதானால் திறமாக
முப்பதஞ்சு னாளே, — 40
.... அறுபதானால் னாற்பது நாள்க்
கடுக்காயை உண்டு வா நீ யேளான்
வயசங்கே......... தானால் எரக்கவே

முடிவு :

அரியவே அப்பிறக சத்துத் தானுமதில் கேளு
......த்திரந் தான்னேமவற்ணம் தெரியவே
சிகப்பு வற்ணம் ரெண்டாம் பட்சம் செப்பக்கேள்
கருப்பானால் மூணாம் பட்சமறியவே வெளுப்பானால்
னாலாம் பட்சமாகத் தான்னாலுவகைச்சாதி

காலம் :

இல்லை

குறிப்பு :

ஏடுகள் மிகச்சிதிலம், பாடல்கள் முழுமையானதாக இல்லை. இதில் வெண்காரரசக் கட்டு, சூசத்துக்கட்டு, செங்காந்தைநாகக் கட்டு, சீந்திக் கற்பம், வேம்பூக்கற்பம் முதலியன உள்ளன.

✻ ✻ ✻

வரிசை எண் : 2608 சுவடி எண் : 1369

மாந்திரீகம் முதலியன

ஏடுகள் : 79 கி,எண்ணிக்கை : 100 அளவு : 13.5 × 2. செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் : மருந்துவம்
நிலைமை : சிதிலம் முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சொல்லவே சரிதையிலே நின்றும்
மனம் வீழ்கில் சுகமாக கிரிதையிலே தூக்கும் பின்னு
அல்லவே கிரிகை விட்டு மனம் தான் வீழ்ந்தால்
ஆச்சரியம் யோகத்தை யடுத்து நிற்கும்.

முடிவு :

பத்தியென்றால் குருபதத்தில் ... ... வேணும்
பறம்புகுந்த ... ... பதம்
முத்தியே ... ... சுழி முனையை யறிய வேணும்.

காலம் :

இல்லை

குறிப்பு :

இந்நூல் மிகச்சிதிலமாக உள்ளதால் பாடல்கள் தெளிவாக அறிய இயலவில்லை. ஏடுகள் இடை இடையே விடுபட்டுள்ளன.

வரிசை எண் : 2609 சுவடி எண் : 1370

பொதிகை சுவாமி — 50

ஏடுகள் : 7 கி எண்ணிக்கை : 500 அளவு : 35 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : பொதிகைசுவாமி பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

வானும் புவிமதியுங் கதிரொளியுந்
தேனுந் தெளிந்த சிவ குருவே...
தானுந்தான் நால் மறையுமாராய்ந்து
நன்றாயிந் தன்பதையும்
கோலமுடன் கிணேசனருள் கூர்

முடிவு :

சேலான்குருவுடைய செல்வனாவான்
சிந்தையிலே களங்கமத்த சித்தனாவான்
தாலானமணி போத்தும் பிரம்மனார் சொன்ன
நலமுடைய முனிவாமொளி நாடிமுத்தே. — 50

அகஷ்தியனார் அருளிச் செய்த வயித்திய முப்பூ
அன்பது முத்தும். ஸ்ரீ மகா பொதிகை மேவும்

தெட்சணாமூர்த்தி அனுக்கிரகத்தினாலே தாமரைக்
கமல போல் யிருக்கப்பட்ட மகா பாதங்கள் கயிகளினாலே
தூக்கி அடியேன் சிரசு மேல் வைத்துக் கொண்டு
யிருக்குரேன், ஆனதுனால் பத்தி முத்தி சித்தி
இம்மூன்றும் சித்தம்கிளந்து கட்டளையருள
வேண்டி யிருக்கப்பட்ட ஸ்ரீ வானுத தாவிய
பொதிகை மேவும் கும்பமுனி சுவாமி பாத
சங்களுக்கு சறணம் சறணம் சறணம் சறணம் சறணம்.

காலம் :

இல்லை

வரிசை எண் : 2610 சுவடி எண் : 1371

சுருபாநந்தர் பாடல் (ஆனந்தக் களிப்பு)

ஏடுகள் : 7 கி. எண்ணிக்கை : 500 அளவு : 35 × 3.5 செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : சுருபாநந்தர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

அந்திக்கு முன் வந்தானூடே
ஆதிகால மய்யனை அன்பாகக் கண்டு
சந்தித்து வைய்யகந் தாங்கிய பொதிந்த
தன்னுட பொதிந்து விந்து தன்பதியில் கூடி — 1

முடிவு:

தாயுந் தகப்பனு மல்லால் தங்கள் தம்பித்
தமையனுவனைக் கூட்டி மாமனை செவிக்குமுன்னே
மடவாதிகேளுங் கோவங்காள் கூட்டி ....
னாடி முன் வைத்துப் பிலமாகத் தொந்தோமென்றாடி

காலம் :

இல்லை

வரிசை எண் : 2611 சுவடி எண் ; 1372

திருமூலர் சரக்கு நிகண்டு

ஏடுகள் : 6 கி. எண்ணிக்கை : 500 அளவு : 35×3 5 செ.மீ
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : திருமூலர் பொருள் : மருத்துவம்
நிலைமை : சிதிலம் முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

கார்மே சூத புண்ணியம் கற்பமே
கலவை சத்தி சூரிய விரோதி சோதி
சூத்திரன் துள்ளி ராசன் வீரியன சீனிராதி
விண்ணு நீர்வின் மருந்து
சீர்பெறு யிரதமென்று செப்பினார் நந்திதானே. — 1

முடிவு :

மத்தமும் விணுகஞ்சாம் சாம்பலு
நறுங்கிராம்பும் பததிரி கசகசாவும்
காந்டு சாதிக்காயும் குற்றமில்லா வாக்கினோடு
குரம்பையெட்டி வைய்தாமென்று மத்ததே நிகண்டன்
பத்தொன்பதும் ஓதினார் நந்திதானே. 50

திருமூலர் பாடின நிகண்டு முற்றும்.

காலம் :

இல்லை

* * *

வரிசை எண் : 2612 சுவடி எண் : 1373

இடைக்காட்டுச் சித்தர் சூத்திரம்

ஏடுகள் : 5 கி. எண்ணிக்கை : 500 அளவு : 35×3 செ.மீ
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : இடைக் காட்டுச்சித்தர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்லநிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

காருலாவு மேகமே நற்கங்கை சத்தியோ
    சிவப்பாசில் வாழ்வீட்டுப்புச் சுத்தி
பண்புலாப் புவாகநீர்
    சீருலாவு கங்கையால் தெளிந்த வெள்ளையுப்புலே
நீர் கலந்த போதமூல 1

முடிவு :

வழலையென்ன வென்று சொல்லவாதி
    நீதான வாறு மூன்று குருவடா
வழலை தானிதை விட்டால் மட்டை வாதியாவரே — 35

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில் வழலை உப்பு முதலிய மருத்துவ முறைகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 2613 சுவடி எண் : 1374

அகத்தியர் சோடசம் — 200

ஏடுகள் : 18 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 35×3 செ மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஆதியென்ற பூரணத்திலிரு னூத்திச் சொஷ்சம்
    அடக்கிவிட வேணுமென்று ஆயிபாதம்
போதியென்ற மன்ந்தேத்தியே யோறாண்டு
    பூசித்தேன் வளுமவந்து அறிக்கையிட்டாள் — 1

முடிவு :

நோகுமப்பா புலத்தியனே யிருநூறும் பாத்தால்
நூல்போட்ட வெளிப்போலே துலகமாகும்
வாகுமப்பா பூணத்தையுந் தனுகாய மருவியே
சொல்லி விட்டோந் தேறிக் கொள்ளு

ஹரிஓம் நன்றாக குருவாழ்க குருவேதுணை — 201

குப்பமுனி அய்யர் கிருபை செய்ய வேண்டியது.

குறிப்பு :

இல்லை

* * *

வரிசை எண் : 2614 சுவடி எண் : 1375

கமலமுனி சூத்திரம்

ஏடுகள் : 8 கி. எண்ணிக்கை : 500 அளவு : 35×3 செ.மீ
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : கமலமுனி பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

கார்சாரத் துறையே கண்டவனாருச்
சார்பார் சருகுதனை பாத்தவனார் வீர்க்கருவிட்டுக்
கட்டுனதோர் காயுனை தாக்குனதார் முருகுசெறியுங்
கிணேசன் காப்பு — 1

முடிவு :

தானென்ற கார்சார் மறிந்தவர் தானென்ற
உப்புத்தானெழு அங்கமாய்
தானென்ற வாதியா சகல சித்தாதி
தானவனும் பிண்டமதானர்கும் முத்தியே.
கமலமுனி சூத்திரம் முத்தும். — 76

காலம் :

இல்லை

குறிப்பு :

இச்சுவடிக்குப் பின் 4 முதல் 8 ஏடுகளில் சிற்சில முறைகளின் செய்யுட்கள் காணப் படுகின்றன. மிகச் சிதிலம்.

வரிசை எண் : 2615 சுவடி எண : 1376

கருவூரார் பாடல் கலிவெண்பா

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 50 அளவு : 35×3.5 செ மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : கருவூரார் பொருள் : மருத்துவம்
நிலைமை : சிதிலம் முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

மூவாயிரத்தில் முளுப்பாடல் முன்னூறு
பாலாயுரைத்த நொண்டி பாடலே
பூவான முப்பூவின் பாடலென முக்கியமுடன்
வாதவித்தை முப்பத்தோர் பாட்டாய் மொளி — 1

முடிவு :

ஊது பற்பம் வெள்ளியிலே
ஒன்பதரை தப்பாது
நீதியம் பூ ணத்தில் நெருவாய் - பாதமது
சித்தியாம் தேகச் சிரமமுற்தம் கொள்வாத
முத்தியா முப்பத்தொன்றே முற்றே — 31

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில் பற்ப வகைகளும், மருந்து செய்முறைகளும் கூறப்பட்டுள்ளது.

வரிசை எண் : 2616 சுவடி எண் : 1377

அகத்தியர் சூத்திரம் — 64

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 50 அளவு : 35×3 செ மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : சிதிலம் முழுமை : முற்றறற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

குருவேசயனீர்

ஆதியென்ற பூரணமாய் கண்டத்துள்ளே
யாத்தாளை தொளுதுனின்றைங்கரனைப் போற்றி
சோதியென்ற அறுனூறும் பெருநூல் தன்னைச்
சூத்திரத்தான் அறுபதுக்குள் சுருக்கிவய்த்தெனெ
சோதியென்ற கருக்குருவும் வெளியதாக
திறந்திட்டேன் கைபாகம்
வீதியென்ற கெவுனத்தின் வோட்டம் பெற்ற
விளைந்த மணியின் னூல்தான் சொல்லக்கேளே.

முடிவு :

கூறியதோர் தூரிசினுட ஆட்டைக் கேளு
குண்டு போற் துரிசை கட்டி வாங்கி மாறியதோர் சிறுப்பா
....
....

குறிப்பு

இந்நூலில் 64 பாடலுக்கு 15 பாடல்களே முழுமையாக உள்ளன.

வரிசை எண் : 2617 சுவடி எண் : 13 8

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 129 கி. எண்ணிக்கை : 3000 அளவு : 17.5 × 4 செ மீ
பக்கத்திற்கு : 11 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் : மருத்துவம்
நிலைமை : சிதிலம் முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

நெய்நாளிக்கு மருந்து நிலப்பனைக்கிழங்குபேரு,
நாவல்மரம்பேரு, கருங்காலிமரம்பேரு,
தண்ணீர் எட்டு மரக்காலில் கிஷாயம் போட்டுப்,
பதக்காக வற்றினபிறகு சதாவேதித் தண்ணீர்
நாழி, பாலநாளி, விளங்காய் - 5
வயிற்றில் வியாதிக்குக் குழம்பு

முடிவு :

ஆடாதொடைச் சாறு நாழி, சிறுதும்பைச் சாறு நாளி,
வெள்ளறுகுச் சாறு நாளி, பேய்க்கும் மட்டிச்சாறு,
நாளி, திருகு கள்ளிப் பாலுளக்கு யிதுவெல்லாங்
கஷாயத்தில் ... ...

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில் இருமலுக்குக் கஷாயம் முதலான முறைகள் உள்ளன. சில்லரை அநுபவ வைத்திய முறைகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 2618 சுவடி எண் : 1379

பிரமமுனி சூத்திரம் — 384

ஏடுகள் : 113 கி. எண்ணிக்கை : 2000 அளவு : 25 × 2.5 செ மீ
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : பிரமமுனி பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்லநிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

சீரருளான சோதிமயமான ஞான சோதி
ஆரணி கொன்றை சூடி யாறணிந்தானைப் போற்றி
வாரணிரிஷிகள் பாத வணங்கியேயிந்த நூலை
காரணமாகப் பாடக்கணபதி காப்புத்தானே. — 1

முடிவு :

தான்பாடினோமென்று சொன்னார் சித்ததை
தாண்டாபாருலகில் மானம் ப.......... களே
யிதை நம்பாதேவாடியே மனம் நொந்து
போகா மற்று மாயவனே மனதனிலறிந்து
....
....

காலம் :

இல்லை

குறிப்பு :

இது எமது மகால் சுவடி எண் 439(c) போன்றது பாடவேறுபாடுகள் மலிந்து காணப்படுகின்றன. இதில் சூரணம், லேகிய வகைகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 2619 சுவடி எண் : 1380

வர்மக் கண்ணாடி — 500

ஏடுகள் : 125 கி. எண்ணிக்கை : 13.0 அளவு : 25 × 3.5 செ.மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : வர்ம வைத்தியம்
நிலைமை : நல்லநிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஆதியாய் முச்சுடராய் ஒருவராகி
அம்புவியை அமைத்த கற்த்தனருளினாலே
நீதியாய் சித்தர் பாதம் சிரசிலாக்கி
நித்தியமும் பெரியோர்கள் சரணம் போற்றி
சோதியாய் நின்றிலங்கும் மெந்தன் குருவே போற்றி
துகலுமாய் வற்மமது ஒளி போல் துலங்கி — 1

முடிவு:

வறயோக துய்யநிலை கொண்டிருந்த மந்தீகந்தீரும்
பிச்சி தொகுப்பாக கொண்டிருந்த வியாதி
மற்யோக மெல்லாந்திரு அங்கவினை வேருளாகி
நீளும் பரமகுரு ஒரு நாளு நீங்காமல் காணே — 500

வற்மக் கண்ணாடி அஞ்னூறும் கடவுள் கிருபையினால்
குருவருள் கடாக்ஷத்தினால் முற்றும்.

காலம் :

1912ஹு வைகாசிமீ 31உ எழுதி முடித்த வற்மகண்ணாடி அஞ்னூறும் எழுதி முடித்த குளச்சல் சாத்தங்கரை மாதனாவிளை கறுப்பன் நாடார் பூத்தான் குட்டி நாடார். கடவுள் முன்னிற்க குருவே துணை. சுபம்.

குறிப்பு ;

பதிப்பிற்குகந்தது. ஏடுகள் நல்லநிலையிலும் எழுத்துக்கள் தெளிவாகவும் காணப் படுகின்றன.

வரிசை எண் : 2620 சுவடி எண் : 1381.

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 145 கி. எண்ணிக்கை : 2000 அளவு : 23.5 × 4 செ.மீ.
பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

குன்ம வாயுவுக்குக் குழம்பு

மூவள...... சிரசில்சுத்தி எண்ணையெ சிரசில்...
சிறு சூடாய் எண்ணெய் ஊத்தி கா.ாமல்
செய்யவும். சன்னி மாறும். ஒன்று விட்டு
தேய்த்துக் குளித்தால் வாதந் தீரும். தேக
பலம் உண்டாகும்.

முடிவு :

சூலைக்கும், புண்ணுக்கும் மருந்து

கோழிமுட்டை ஒடு எடுத்து அரைகளஞ்சிரெசம்
துருசு பலம் கெந்தகம் பொடித்துப் போட்டு
சட்டியில் செங்கல் போட்டு வறுத்து மணலாவது
போட்டு அதில் முக்கால் திட்டம் புதைத்து
எழரை நாழிகை யெரித்து கதிர் கொண்டு

காலம் :

இல்லை

குறிப்பு :

சில முறை அனுபவ வைத்திய முறைகள் கூறப்பட்டுள்ளன. பதிப்பிக்க உகந்தது.

★ ★ ★ ★

வரிசை எண் : 2621 சுவடி எண் : 382-a

அகத்தியர் கருமகாண்டம் — 300

ஏடுகள் : 63 கி. எண்ணிக்கை : 1500 அளவு : 32×3.5 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பூரணமாய் மூலமுதலாறாதாரம்
புரியட்டந் திசை வாய்வு நாடி மூன்று
காரணமாய் யிடை பின்னாம் சுளினையாகி
கலந்து நின்ற வாத பித்த சிலேற்பனமுமாகிக் — 1

முடிவு :

வரிசையாய்ச் சொல்லுகிறேன் கணைகளெது மாந்தமொடு
சுளிதுரப்பு வளிகளெது
பரிகமாங் கரைப்பனொடு பறங்கியெது பட்சியொடு
பறவையுட தோசமது
தெரிசனபாங் கணங்களிலே வருவதெது சீசலங்

கொண்ட சிறுவருக்கு தெய்வ அமுற்தங்
கரிசனமாத் தெண்ணூலின் கற்மங் கட்டான
மருந்துவகை கள்க்கு முத்தே. — 300

காலம் :

இல்லை

குறிப்பு :

இது எமது மகால் சுவடி 323 (b); 9 போன்றது. பாட பேதங்கள் உள்ளன.

★ ★ ★ ★

வரிசை எண் : 2622 சுவடி எண் : 1382-b

அகத்தியர் செகசாலத் திரட்டு — முதற்காண்டம்

ஏடுகள் : 54 கி. எண்ணிக்கை : 3000 அளவு : 32 × 3.5 செ மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

காரணமே மூலவட்டந்தன்னில் நிற்கும்
கணபதியும் வல்லபையும் தேவர் காப்பு
பூரணமாம் பராபரையுமஞ் சிவனும் நந்தி
பொருந்திநின்ற பஞ்ச கற்றா ணங்கள் காப்பு — 1

முடிவு :

காண்டமுடன் கற்ம சூத்திரம் முன்னூறு கண்டீரே
காண்டந்தான் முன்னூற்
தூண்டு வயித்திய பாகஞ் செந்தூரமுன்னூற்
துலங்குமிந்த முதகாண்டம் முன்னூறோடே
... ... — ... ...
... ...

முத்தும்

காலம் :

இல்லை

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 1646 / 824-a போன்றது.

வரிசை எண் : 2623 சுவடி எண் : 1382-c

அகத்தியர் செகசாலத் திரட்டு — இரண்டாங் காண்டம்

ஏடுகள் : 54 கி. எண்ணிக்கை : 3000 அளவு 32 × 3.5 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

தானமுத்தி வயித்திய காண்டத்திலுள்ள
சகல் மருந்தான தெல்லாந் ... ... தகுதியாக
வான முத்தி பெற்ற பெரியோர்க் காபப்பா
மகத்தான வாத வித்தை யினிமேல்ச் சொல்வோம்.

முடிவு :

சுகிற்த முண்டு சொன்னபடி நடந்தாயானால்
தள்ளவே மாட்டார்காள் ரண்டாங்காண்டம்
நாத போதனாக்காங் சுருமானந் தங்கமுத்தே —
ரெண்டாங்காண்டம் முற்றும்

காலம் :

1201 ஸு மார்களி மீ 28-வ ஸ்ரீ வைகுண்டந் சன்னதித் தெரு அளகப்பிள்ளை குமாரன் சிவசுப்பிரமணியன் எழுதியது. தேவி கிருபை உண்டாகும்.

குறிப்பு :

இது எமது சுவடி எண் 1647 / 824-b; 1650 / 852-b போன்றது.

வரிசை எண் : 2624 சுவடி எண் : 1382-d

அகத்தியர் செகசாலத் திரட்டு — மூன்றாம் காண்டம்

ஏடுகள் : 27 கி. எண்ணிக்கை : 1500 அளவு : 32×3.5 செ மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

மானொருகை மழுவொருகை தரித்த நாதன்
வாதமது வளியுரைத்தாராதியந்தம்
நானொருகை யிந்திரமாசால வித்தை
நவிலுகிறேன் நந்திகுரு நாதாக்கள் — 1

முடிவு :

ரசருக்குள் புண்ணிய மேவும் திரணமென்று நினையாதே
சிவன் மேலானை சிகசாலத்தாயிரத் திருநூறுந்தான்
வானமவர் ஒட்டாது பிணி தீயில்லை வைத்திடத்து
துக்கை மூன்றாங் காண்டம் முற்றே. — 300

முற்றும்

காலம் :

1021 ஷு மார்களி மீ 25-உ புதன் கிழமை ஸ்ரீ வைகுண்டந் சன்னதித் தெரு அளசப் பிள்ளை குமாரன் சிவசுப்பிரமணியன் எழுதியது. நீடூழி வாழ்க. தெய்வ சகாயம். குருபாதமே கெதி.

குறிப்பு :

இந்நூல் எமது சுவடி எண் - 1648 / 824-c; 1651 / 825-c போன்றது.

★ ★ ★

வரிசை எண் : 2625 சுவடி எண் : 1382-e

அகத்தியர் செகசாலத் திரட்டு — நாலாங் காண்டம்

ஏடுகள் : 51 கி. எண்ணிக்கை : 3000 அளவு : 32×3.5 செ மீ
பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்லநிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

மூன்றான முப்பாளே ஆதியந்தம் முடிவான
பொதிகை வரைக்கடி வாரத்தில்
தோன்றாத மூலிகையுந் தோன்றுஞ்
சுருதி முடிந்திட மது சோதி பாரு — 1

முடிவு :

பத்தியுடன் செய்து வரையள் தாண்டி
பலன் பெற்றார் மேன்மேலும் மவுனமப்பா
முத்திபெறுந் தவயோகி யானாலிந்த
மொளிதப்பா துலகினிலே நடந்தாக யானால்ச்
... ...
தானிந்த நூல் காண்டமுத்தே — 300

பொதிகாசல பாதார விந்தமே கெதி

காலம் :

1021 ஷூ அர்ப்பசி மீ 17-உ சுக்கிர வாரமும் பூருவ பட்சத்து பிரதமையும் விசாக நட்செத்திரமுங் கூடின சுபயோக தினத்திலெழுதி முகித்திருக்குது.

வரிசை எண் : 2 26 சுவடி எண் : 1383

சிவவாக்கியம் ஒடுங்குநிலை

ஏடுகள் : 46 கி. எண்ணிக்கை : 1500 அளவு : 33×3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறிய இயலவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை ; நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் ;

அஞ்சுமூணு மெட்டும் யானிருந்த மந்திரம்
பிஞ்சு பிஞ்சு கிடக்கிது பிரானிருந்த
அட்சரா...... நஞ்சு தொஞ்சு போகாமல்
நடுவிலொன்றாக்கு விராலஞ்சு மெட்டுமாக
வெய மந்துதே சிவாயே — 1

முடிவு :

ஊரிலுள்ள மானிடர் ள் ஒ ்றதாக
கூடியே தேரில்வடத்தைப் பூட்டி செய்மை
வைய்த்திருக்கிறீர்
ஆரிலுமரி யொண்ணாத ஆதி நாதாக்
கருத்துரைப் பேரில்லாத மாந்தா பண்ணும்
பாரு பாருமே 302

தேவிசகாயம்

தொழுமாதவத்துக் குறியோனை சுருதி மறைக்குள் முடிவோனை
நழுவவிட்டால் நலமாமோ நடுகலுனக்குத் துணையாமோ
கழுவிச் சீலைக்குப் பணி பூட்டி கருத்தரிதுவே
மெய்யென்று இழவு மாத்தைத்திரன் கூட்டியாருமினைக் கெட்டிழு
பானேன்.

காலம்

இல்லை

குறிப்பு :

இறுதி ஏட்டில் தனிப்பாடல் ஒன்று எழுதப்பட்டுள்ளது.

வரிசை எண் : 2627 சுவடி எண் : 1331

அகத்தியர் குணவாகடம்

ஏடுகள் : 185 கி.எண்ணிக்கை : 3000 அளவு : 35×3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்லநிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பாகுடன்றீசன் பாதம் பணிந்து
......ளாய்ந்து வாகடச் சுவடியே......
ஆகம வீதியில் நரலால் அறிந்திடும்
நோய்கள்க் கெல்லாம் — 1

முடிவு :

நோவான மகாவாத சன்னி...... தயிலம்
நாடிரு முன்னே ஒளிந்து விட
காவான முள்ளி விளமுன்னனெவரும்
களச்சி ....
பாவான சீந்தி...... வொயமுக்கூளவோ
பற்படாகம் நிலவேம்பு . வரும்

காலம் :

இல்லை

குறிப்பு :

இறுதியில் ஏடுகள் சிதிலமாக உள்ளதால் பாட்டின் எண்ணிக்கை அறிய இயலவில்லை.

வரிசை எண் : 2628 சுவடி எண் : 1385-அ

தர்மந்திரி நூல் சாத்திரம் (நாடி)

ஏடுகள் : 221 கி. எண்ணிக்கை : 5000 அளவு : 32 × 3 செ மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : தர்மந்திரர் பொருள் ; மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுள்ளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

எல்லையில் எழுந்த நாடி எழுபதிறா யிறந்தான்
பல்லியால் பயின்ட நாடிபதுஸ எழுநிகுக்கி
அல்லியங் குழலினாளே அரியவேயுரைத்த நூலில்
நல்லதோர் நாடிமூன்று நயம்பிற உணர்ந்து பாரே — 1

முடிவு :

கீழ்க்கா நெல்லி சாட்டறணை
துளசி மூக்கறட்டை
உத்தாமணி கஞ்சாங்கோரை
சிறுகுறுஞ்சா கரிசலாங்கண்ணி
சிறுமாவலி முசுமுசுக்கை;

பேராம்பட்டுலே யிருக்கும் பெருமா செட்டியார்
குமாரன் வெங்கடப்ப செட்டி எழுதிய
அகஸ்தியர் வாகடம், தர்மந்திரி வாகடம்
எடுத்தவர் குடுக்கவும், யிது தாங்களறியவும்.

காலம் :

இல்லை

குறிப்பு ;

இந்நூல் நாடி சாத்திரத்தைப் பற்றிக் கூறுகிறது.

★ ★ ★

வரிசை எண் : 2629 சுவடி எண் ; 1385-b

பாலையானந்த சுவாமி ஞானக்கும்மி

ஏடுகள் : 28 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 32×3 செ.மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : பாலையாநந்த சுவாமி பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் ;

சீற்மேவு ஞானவடிபற தேசிகன்
சறக்குந் தன்னருளால்
பார்மீது ஞானகும்மி பாடசிவ
பாலன் கணபதி காப்பாமே. — 1

முடிவு :

யெடகலை பின்ங்கலை யெண்ணத்தை சொல்லலா சிங்கி
யெடகலை சந்திரன் பின்ங்கலை சூரியன் சிங்கா.
சந்திர சூரியன் ஒண்ணான தேவவிடம் சிங்கி
சகலகலையும் பொருந்து நடுச்சுழி சிங்கா,

காலம் :

இல்லை :

குறிப்பு ;

இடங்கலை, பின்ங்கலை ஆகிய சுழிகளின் தன்மையை கும்மி வடிவத்தில் கூறுகிறது

வரிசை எண் : 2630 சுவடி எண் : 1386.

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 94 கி. எண்ணிக்கை : 1500 அளவு : 32×3 செ மீ
பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

வாதசுரம், பித்த சுரத்துக்கு சாஸ்திரபேதி கல்பம்

சாஸ்திர பேதி பலம் — 1 வளையல் உப்பு பலம் — 1
இந்துப்பு பலம் — 1 ரச செந்தூரம் பலம் — 1
வெண்ணெய் வெங்காரம் சுத்தி செய்து பலம் — 1

முடிவு :

பீனிசத்துக்கு

மா தளம்பூ, அலர்ந்தபூ கொண்டு வந்து அதற்குள்ளிருக்கும் கடுகு போலுள்ளதை உலர்த்தி மருந்து பிழியிற போது அஞ்சு எடுத்துக் கொண்டு அதை பிளிஞ்சு யிவம் பிஞ்சாக ஒன்று கூடப் போட்டு,

காலம் :

இல்லை

குறிப்பு :

சில அனுபவ வைத்திய முறைகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 2631 சுவடி எண் : 1387

இராமதேவர் முப்புச் சூத்திரம்

ஏடுகள் : 30 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 23×3 செ மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : இராமதேவர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஆதியாம் பூனீர் வழலை — ஆதி
அந்தமான வெடி கம்பாயும் தேராய்
சோதி யழுத்த னுணுக்கி — அயச்
சுத்தர சம்பற்றில் தீப்பட னாட்டி — 1

முடிவு ;

தீற்க்கமாய்க் குருவையுங் காற்த்து — சிவ
சித்தியெனுந் தீஷ்சை திறமாக விண்டேன்
தார்க்க யென்னாளும் வாசிக் — கருவைக்
கண்டாலு மெப்போதும் வாழ்ந்திடலாமே — 100

காலம் :

இல்லை

குறிப்பு ;

இதில் முப்புச் சுண்ணம், லிங்கக் கட்டு, துருசுச் சுண்ணம், திலதமை, வசிய வாடை ஆகியவை உள்ளன. எழுத்துக்கள் தெளிவாக உள்ளன.

★ ★ ★

வரிசை எண் : 2632 சுவடி எண் : 1388

பிள்ளைப் பிணி ஏடு

ஏடுகள் : 30 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 23×3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஏகமாகி யிருந்த பராபரத்தின் ... ...
தேகசீவ சைதன்னிய சிகார ... ...
யோகமாக நினைக்கு மவையு ... ...
தோகையாள் சொல்லி ரத்தின சுருக்கமே.

முடிவு :

ஆதியின் விலாசமிலை யானசெகமி யாவும்
பேதகம தாயறிஞர் பேசுவது முண்டோ
சாதி பலவா வானவுயிர் சேகாமி தென்றே
நீதிமொழி யானபதி னெட்டுமிலை முற்றே

குருசகாய முண்டாகவும்

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில் பால வாகடம் போன்றது, குழந்தை மருத்துவம் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

* * *

வரிசை எண் : 2633 சுவடி எண் : 1389

பிள்ளைப் பிணி ஏடு

ஏடுகள் : 30 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 23 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

கெந்தம் விராகனிடை		— 2
திப்பிலி	,,	— 2
மிளகு	,,	— 2
தாளகம்	,,	— 2
வாளம் சுத்தி பண்ணினது விராகனிடை		— 2

முடிவு :

காய்வைத்துக் கீழே யிறக்கி வைத்துக் கொண்டு, பொடியை அரைக்கால் நாழி வருத்து குடுக்கையிலடைக்கவும். குன்மம் பீலிகை சூலை தீரும். தூரம் யில்லாது உண்டாகும். பண விடை கருப்புகட்டியிலூட்டி அண்ணாக்கமுழுள்கவும்

காலம் :

இல்லை

குறிப்பு :

பல அனுபவ வைத்திய முறைகள் கூறப்பட்டுள்ளன. பால வாகடம் போன்று குழந்தை மருத்துவம் கூறப்பட்டுள்ளது.

★★★★

வரிசை எண் : 2634 சுவடி எண் : 1390

வர்ம வைத்தியம்

ஏடுகள் : 50 கி. எண்ணிக்கை : 1500 அளவு ; 23×3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : சவரிமுத்து நாயனார் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை ; முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

பூவார் சிரகிரியிர் பொன்னி வரவழைத்து
பாவா ரணமுகனை வாழ்த்தியே — நாவார
வாறுசுவை தேர்நிகண்டின் ஆரியத்தைச் செந்தமிழாற்
தேறு சுவை செய்தேன் தெரிந்து — 1

முடிவு :

ஓங்கார கண்டகமு மோதியிடு மாதண்டை
நீங்காத ற்குணத்தை நீ கேளாய் ... ...

காலம் :

இல்லை

★★★★

வரிசை எண் : 2635 சுவடி எண் : 1391

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 26 கி. எண்ணிக்கை : 1500 அளவு : 21×2 செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் : மருத்துவம்
நிலைமை : சிதிலம் முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சுகமான புனுகு அதிலே களஞ்சி கூட்டிதேடவே
வெடியுப்பு நீராலாட்டி செறப்பாக வில்லைச்
செயிது றவியில்போடு.
நாடவே......... வைய்த்து மூடி நலமான
சந்து வாய்ச் சீலை செய்து
போடவே முளபிடத்தில் சுன்னமாகும்
போக்கு அதிலே சொல்லுகிறேன் புகழ்ந்து பாரே — !

முடிவு :

வெள்ளையெருக்கம் வேற்வடவேறு வாங்கி
½ மெழுகு திருசு வசம்பு மஞ்சள் யிம்மூன்றும்
சுட்டு மேல்கறி நீக்கி பருமாய் ஓர்இடை
யெடுத்து துளசிசரி கோரோசனை சமன்

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில் மாறனம், துவலைக்கு, கை கால் உளைச்சலுக்கு, மேகம் பாறு பத்து ஒன்றுக்கும், வயறு அலைச்சலுக்கு, கண்ட மாலைக்கு முதலியனவற்றிற்கு மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 1036 சுவடி எண் : 1392

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 15 கி. எண்ணிக்கை : 500 அளவு : 23 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தாது புஷ்டிக்கு

வெள்ளைப் பூண்டு ஒரு பூண்டு சாதிக்காய் கிராம்பு,
சமன் தேன் விட்டு அரைக்கவும். வேளைக்கு
புளியங்கொட்டை அளவும்.

முடிவு :

பெரும்பாட்டுக்கு காவிகல்லை நுணுக்கி செண
தவிட்டில் குடுக்கவும்.

குறிப்பு :

இதில் சில்லறை அனுபவ வைத்தியங்கள் கூறப்பட்டுள்ளன.

❋ ❋ ❋

வரிசை எண் : 2637   சுவடி எண் : 1393

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 48   கி. எண்ணிக்கை : 1000   அளவு : 17×3 5 செ மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள்   ஆசிரியர் : பலர்   பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை   முழுமை : முற்றுமுளது   எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

துருசு சுண்ணம்

வீரம்பலம் - 1 ஒரே கட்டி ...... கோப்பை
பீங்காணில் போட்டு திருகு கள்ளிப் பால் ... ...
விட்டு ஒரு நாள் வைத்திருந்து மறு—
நாளெடுத்து வெங்காரம் 2, வாய் நீர்
விட்டரைத்து வீரத்துக்கு பூசி வெயிலில்...

முடிவு :

கருவங்க பாஷாணம்

கறுவங்கம் முதியார் கூந்தலில் பற்பம் யொன்
ளு வரையில் செந்தூரம், தாறம், காரீயம்,
சமனிடை நத்திச்சூரி சாறில் ...... கெசபுட
செந்தூரம் மேகம் 21 தீரும்

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில் நாக சுண்ணம், வெள்ளை துருசு சுண்ணம், தாளச் சுண்ணம், கெந்தக பற்பம், தாளக பற்பம், முப்பூர பதங்கம், ரசவீர பதங்கம், தாளகச் செந்தூரம் முதலியன கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 2638 சுவடி எண் : 1394

அகத்தியர் வாகடம்

ஏடுகள் : 92 கி. எண்ணிக்கை : 3000 அளவு : 30 × 3.5 செ.மீ.
பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பரமாதுமையொரு பாகனாரருளிய தீதிலா
வாகட நூலைச் செந்தமிழ் நீதியா
யெனக்கிது நிறைய வோதுவாம்
ஆதியே பரமனே அரகரா சிவசிவா — 1

முடிவு ;

.... கூறது சிறுமூலஞ் சினத்துக்
களியுமென்றும் பல பலனாற்ற மதாய் விருமற்றுக் களியுமே.
இல்லைவாத... ற்று மூலமமை விலவிலபெ புலவத்து
மெய் வீங்கியே யெல வியாலாவியிருமலுமீறு
மெல்லல் செய்திடுமே கடுக்குமே

காலம் :

இல்லை

குறிப்பு :

அகத்தியர் வாகடம் என்ற நூல் முன் தொகுதியில் உள்ளன. முற்றிலும் மாறுபட்டது.

★ ★ ★

வரிசை எண் : 2639 சுவடி எண் : 1395

கொங்கணர் 500-த் திரட்டு

ஏடுகள் : 177 கி எண்ணிக்கை : 5000 அளவு : 30 × 4 செ.மீ.
பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : கொங்கணர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஆதியந்த மில்லாத வெளியுந் தாண்டி
அகன்று நின்ற மூலகுரு பதமே போத்திச்
சோதியந்தத்துள்ளி ருக்கும் பெரியோர் பாதந்
துரிய வெளிக் குள்புகுந்த ரிஷிகள் பாதம்

முடிவு :

பாரே யிச்செந்தூரம் பா......... யாயிரனே
தானன்பது மாத்துக்கு மேவொடுங்கரே யிதிருன்றி
காட்டெழு நாளுண .... சாரே
ஒரு சட்டை தங்கம் போலே வீழுமே

காலம் :

இல்லை

குறிப்பு :

இறுதி ஏட்டின் ஓரங்கள் ஒடிந்துள்ளன

வரிசை எண் : 2640 சுவடி எண் : 159)

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 46 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 28 × 3 செ மீ
பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

உள் மூலத்துக்கு மருந்து

நத்தை, சீரகம், பெரும் சீரகம், கருவப்பட்டை, வெங்காயம் இதை யெல்லாங் கொணர்ந்து நத்தை சதையை யெடுத்து உறலில்ப் போட்டு துவைத்து இச்சறக்கையெல்லாம் விளக்கெண்ணெயில் போட்டு தாளிதம் செய்து உள்ளுக்கு சாப்பிடுகிறது. உள் மூலத்தைக் கேக்கும்.

* * * *

முடிவு :

அருகம் வேர் தயிலம்

விளம்பினேனருக்கம் வேர் பலந்தானூறு
மேலிலுள்ள பச்சை யெல்லாந் தள்ளிப் போட்டுத்
தழம்பினே னென்னாதே இடித்துக் கொண்டு
தண்ணிர்தானூரு படியதிலே வார்த்து குளம்பாக
காய்ச்சியதையே ....

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில் லேகிய முறைகள், பிள்ளைக்கணைக்கு, நாசிகா பாணம், வெள்ளைக்கு மருந்து, கிரந்தி ரோகத்துக்கு மருந்து, பெரும்பாட்டுக்கு முதலியனவற்றிற்கு மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

★ ★ ★ ★

வரிசை எண் : 2641 சுவடி எண் : 1397

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 50 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 12.5×25 செ மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் : மருத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

அளிஞ்சி விரை, புங்கவிரை, தான்றிக்காய்,
புண்ணைவிரை, கடுக்காய், கார்போகரிசி,
ஆக யிவ்வளவும் சரியிடை பாண்டத்திலிட்டு
சிறுநீர் விட்டு, யிருவதுனாள் ஊறப்போட்டு
நிணல சலர்த்தலா உலர்த்தி மிளகு னாழிகலந்து

முடிவு :

பிற வலிப்புக்குத் திரி

நெல்லிக்காய் கெந்தகம் வாங்கி தூள்செயிது
துணியில் பறத்தி உருட்டி திரிசெயிது
வைத்துக் கொண்டு வேப்பெண்ணை தீபத்தில்
வைத்து னாசியில் பிடிக்கவும். தீரும்.

காலம் :

இல்லை

குறிப்பு :

இதில் பல அனுபவ வைத்திய முறைகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 2642 சுவடி எண் : 1398.

வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 65 கி. எண்ணிக்கை : 2000 அளவு : 19×4 செ.மீ.
பக்கத்திற்கு : 12 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் : சில்லரை வைத்தியங்கள்
